**02.02.2020**

## பத்திரிக்கை செய்தி

## மெட்ரோ இரயில் நிலையங்களில் இன்று (02.02.2020) ஓவியப் போட்டி நடைபெற்றது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை கலைப்பள்ளியுடன் இணைந்து நடத்தும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான ஓவியப் போட்டி இன்று (02.02.2020) காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சென்ட்ரல் மெட்ரோ, எழும்பூர் மெட்ரோ, செனாய் நகர், அண்ணா நகர் கோபுரம், கோயம்பேடு, வடபழனி, அசோக் நகர், பரங்கிமலை, விமான நிலையம் மெட்ரோ, சைதாப்பேட்டை மெட்ரோ, தேனாம்பேட்டை, ஆயிரம் விளக்கு, அரசினர் தோட்டம், மண்ணடி, வண்ணாரப்பேட்டை மெட்ரோ ஆகிய 15 மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெற்றது.

“மெட்ரோ இரயில்” அல்லது “மெட்ரோ நிலையம்” அல்லது “மெய்நிகர் உண்மை” என்கின்ற தலைப்புகளில் போட்டிகள் நடத்தப்பட்டது. 15 மெட்ரோ நிலையங்களிலும் பங்கேற்ற மொத்தம் 1,100 பங்கேற்பாளர்களுக்கு பங்கேற்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**பிரிவுகள்:**

குழு A - 1 முதல் 3 ஆம் வகுப்பு
குழு B - 4 முதல் 6 ஆம் வகுப்பு
குழு C - 7 முதல் 9 ஆம் வகுப்பு
குழு D - 10 முதல் 12 ஆம் வகுப்பு
குழு E - கல்லூரி மாணவர்கள்

‘‘சிறந்த கலைஞர் விருது -2020’’ தேர்ந்தெடுக்க, ஒவ்வொரு மெட்ரோ நிலையத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 ஓவியங்கள் மெட்ரோ பயணிகள் வாக்களிப்பதற்காக 15 மெட்ரோ நிலையங்களிலும் 03.02.2020 முதல் வைக்கப்படும்.

பிப்ரவரி 9, 2020 (ஞாயிற்றுக்கிழமை) சென்ட்ரல் மெட்ரோவில் பிற்பகல் நடத்தப்படும் விழாவில் வெற்றியாளர்களுக்கு ரொக்கப்பரிசும், சான்றிதழும் வழங்கப்படும்.